
கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்



# புலமைப்பரிசில் பரீட்சை

# பரிசளிப்பு விழா-2013

## பூந்தளிர்

1986 தொடக்கம் 2013 வரையான புலமைவரலாற்றுச் சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்

## புலமைப்பரிசில் பரீட்சை

## பரிசளிப்புவிழா - 2013

# பூந்தளிர்

(1986 – 2013 வரையான
புலமை வரலாற்றுச் சிறப்பிதழ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா மலர் – 2013

## உள்ளே ...


01. வாழ்த்துச் செய்திகள் :- வலயக் கல்விப் பணிப்பாளர் - திரு. க. முருகவேல்

கோட்டக் கல்விப் பணிப்பாளர் - திரு. அ. அமிர்தலிங்கம்

உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)

- திரு. சி. கணேசலிங்கம்

ஆசிரிய ஆலோசகர் - திரு. பொ. விஜயநாதன்

அதிபர் - திரு. ப. சிறிதரன்

பிரதி அதிபர் - திருமதி ப. கேதீஸ்வரன்

வகுதித் தலைவர் (ஆரம்பக்கல்வி)

- திருமதி அ. சிறிதரன்

முன்னாள் அதிபர் - திரு. மு. இராமச் சந்திரன்

பழைய மாணவர்கள் - இ. சசிபரன், கு. சதீஜன்

02. அனுபவப் பகிர்வு :- வைத்திய கலாநிதி இ. அகிலன்

:- கேதீஸ்வரன் அபியுகா (தரம் - 05A)

03. முதன்மை விருந்தினரின் கருத்துரை :-

:- திரு. மா. கணபதிப்பிள்ளை

(பணிப்பாளர். மும்மொழி அபிவிருத்தித் திட்டப் பிரிவு.)

04. வாழ்த்துப்பா :- மாணவர்கள்

05. ஆவணப் படங்கள் :- 1986 - 2013 வரை

2010 - 2013 வரையான பகுப்பாய்வு


06. நன்றியுரை - மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம் எமது மாவட்டத்தில் பல சாதனைகளை நிகழ்த்திய ஒரு பாடசாலையாகத் திகழ்ந்து வருகின்றமை பெருமைக்குரிய ஒரு விடயமாகும். பரீட்சைப் பெறுபேறுகளிலும் இணைப் பாடவிதான செயற்பாட்டாலும் முன்னணிப் பாடசாலைகளில் கிளி/ திரு வையாறு ம.வி. சிறப்பான ஒரு இடத்தைத் தக்கவைத்துள்ளது. இவ்வாறு போற்றுவதற்குரிய பாடசாலையாகத் திகழ்வதற்கு அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களின் கூட்டு உழைப்பே பிரதான காரணமாக அமைந்துள்ளது என்பதை நான் உணர்ந்துள்ளேன்.

எமது மாவட்ட மாணவர்கள் பல்வேறு வகையான நெருக்கடியான காலத்திலும் கைவிடாத ஒரு செல்வமாக கல்வியையே பாதுகாத்துள்ளனர். எமது மாணவர்கள் இடம்பெயர்ந்து சென்ற இடமெல்லாம் எடுத்துச் சென்றது புத்தகங்களைத்தான். அதனால்தான் போர் நெருப்புப் பற்றி எரிந்த எமது மண்ணில் கல்வி நீறு ஆறாமல் புதிய பல கிளைகளில் கல்விப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. இன்று எமது மாவட்டம் கல்வியில் உயர்மட்டத்தை அடைந்திருப்பது யாவரும் அறிந்ததே. இதற்கான காரணகர்த்தாக்கள் எமது மாவட்டத்தில் பணியாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என்றால் மிகையாகாது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்தவகையில் கிளி/ திருவையாறு ம.வி. 2013ஆம் வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். பல மாணவர்கள் சான்றிதழ் பெறத் தகுதிநிலை அடைந்துள்ளனர். இவற்றைப் பார்க்கும்போது காலத்திற்குகாலம் மாறும் கலைத்திட்டங்களுக்கு ஏற்பவும் எதிர்காலத்திற்குப் பொருத்தமாகவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளதைக் காண்கின்றேன். அறிவுத் தேடலில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து பயணிக்கின்ற இக்காலத்தில் இயற்கை பெருவெளியை அறிவுப் பொருளாதாரம் நிறைத்துள்ளது. ஆகவே மாணவர்கள் அறிவுத்தேடல் உள்ளவர்களாகவும், நல்ல மனிதர்களாகவும், புத்தாக்குநர்களாகவும் மிளிரவேண்டும் என்பதே எனது பேரவா. நிச்சயமாக இதனை நிறைவேற்றுவீர்கள் என நம்புகின்றேன்.

இந்தப் பிள்ளைகள் சிறந்த பெறுபேற்றை அடைவதற்கு வழிகாட்டியாகவும், தன்னலமற்றவர்களாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்ற திருமதி. ந. அனுசியா, திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம. ரேணுகா ஆசிரியர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். இவர்கள் தொடர்ந்தும் சிறப்பாகப் பணிசெய்து வாழ எல்லாம்வல்ல ரங்கநாதப் பெருமானை வேண்டுகின்றேன். சாதனைகளைத் தாங்கியவாறு ஆண்டுகள்தோறும் வெளிவரும் திருவையாற்றின் சாதனை இதழான "பூந்தளிரை" வாழ்த்துகின்றேன்.

திரு. க. முருகவேல்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

**எடுத்த செயலை முடிக்காமல் கைவிடும்போது வெற்றிக்கு எவ்வளவு அருகில் இருக்கிறோம் என்று பலருக்குத் தெரிவதில்லை.**
**எனவே தோல்வியைத் தழுவுகிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை...



திருவையாறு மகா வித்தியாலயம் தரம் - 05 தேர்வில் தமது அடைவை உச்சமாக்கிய சிறார்களை வாழ்த்தும்; கௌரவிக்கும் நிகழ்வை வழமைபோல் இந்த வருடம் முன்னெடுப்பது பெரு மகிழ்வைத் தருகிறது.

வித்தியாலயத்தில் இருந்து 2013 இல் 48 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள். 6 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் தமது இருப்பை தக்கவைத்துக் கொண்டார்கள். 25 மாணவர்கள் 100 புள்ளிகட்கு மேல் பெற்றார்கள். 37 மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டார்கள்

1980களில் நான் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வருகைதந்த போது திருவையாறு ம.வி. தரம் - 05 பரீட்சையில் கிளிநொச்சி வட்டகையில் தனது ஆதிக்கத்தைச் செலுத்திக்கொண்டிருந்தது. திரு. பரஞ்சோதி, திரு. நா. நடராசா ஆகியோரின் காலத்தில் உச்சநிலையில் இருந்தது. அக்காலத்தில் O/L பரீட்சையில் திருவையாறு ம.வி. உச்ச நிலையிலிருந்தமையும் பசுமையான நினைவுகளாகவும் உள்ளன.

திருவையாறு ம.வி. இன் தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை எனும் செல்நெறியில் திருமதி சி. நடராசா அவர்களின் தடம் ஆழமாகப் பதிந்துள்ளது. திண்ணைப் பள்ளிமுறையில் மாணவர்களை அரவணைத்து அரிய சாதனைகளைப் படைத்திருந்தார். மிலேனியத்தில் திருவையாறு ம.வி.யில் ஆசிரியரான திருமதி ந. அனுசியா அவர்களின் பணி தனது தாயார்வழி அமைந்தது. ஒவ்வோர் காலத்திலும் பணியாற்றிய அதிபர்கள் இணை ஆசிரியர்கள் சிறப்பாகப் பணியாற்றி வந்தார்கள்.

2013 இல் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள். அனைவரிடமும் எதிர்கால வாழ்விற்குத் தேவையான நியமங்கள் உச்ச அளவில் வளர்ந்து விடப்பட்டதாக நான் உணர்கின்றேன். அறிவியல், தொழில் நுட்ப யுகமாக இந்த உலகில் தமது எதிர்காலத்தை சிறப்பாக அமைந்துக்கொள்ள அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள்.

எமது மாணவச் செல்வங்களின் வாழ்விலும், வளத்திலும் அதிக அக்கறை கொண்டவரான அதிபர் திரு. ப. சிறிதரன் அவர்கள் பாடசாலையை சிறப்பாக நடாத்தி வருகின்றார். சூறாவளிக்கு பின்னாக அமைதியாக பாடசாலை மிளிர்கிறது. தொடர்ந்தும் இந்தக் கல்வியை நிலைபெற எல்லாம்வல்ல கனகாம்பிகை அம்பாள் அருள்வேண்டுகின்றேன். மீண்டும் எமது மாணவச் செல்வங்களை மனதார வாழ்த்துகின்றேன்.


திரு. அ. அமிர்தலிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கரைச்சிக்கோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக் கல்விப் பணிப்பாளரின் (ஆரம்பக்கல்வி) வாழ்த்துரை

**தேர்ச்சிமிகு மாணவர்களின் பதிவேடு நோக்கி....**



எமது மாவட்டத்தின் செயற்றிறன்மிகு பாடசாலைகளில் திருவையாறு மகா வித்தியாலயமும் முதன்மையானதாகும். இங்கு ஆண்டு தோறும் நடைபெறும் தேசிய நிலையிலான தரம் - 05 புலமைப்பரிசில் தேர்வில் தொடர்சாதனை படைப்பதை உறுதிசெய்வது மனங்கொள்ளத்தக்கது. 2013 ஆம் ஆண்டு வெட்டுப்புள்ளிக்கு மேல் 06 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் 37/48 பெற்று சித்தியடைந்திருப்பது இதற்குத் தக்கசான்றாகும். இதற்காக அரும்பாடுபட்ட ஆசிரியர்கள், பெற்றோர்கள், அதிபர், பழைய மாணவர்களைப் பாராட்டுகின்றேன்.

எத்தகைய நிலையிலும் தனக்கெனத் தனித்துவத்தைப் பேணும் திருவையாறு மக்கள் கல்வித்துறை வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறையுடன் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும். தேர்ச்சிமிகு ஆசிரியர்களைச் சிறப்பாகப் பயன்படுத்தும் பக்குவம் இவ்வூருக்கே உரித்தான பண்பாகும். அதனை உறுதிசெய்து நிற்பது அனைவராலும் புகழப்படுகின்றது. இதற்கு அடியிட்டுக் கொடுத்த ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களையும், சாதனை படைத்த பிள்ளைகளையும் வாழ்த்துகின்றேன்.

திரு. சி. கணேசலிங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர் ( ஆரம்பக்கல்வி),
வலயக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

**கூர்ந்த மதி என்பது ஒரு விழுக்காடு உள்ளுணர்வு,**


**99 விழுக்காடு வியர்வை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய ஆலோசகரின் (ஆரம்பக்கல்வி) வாழ்த்துரை

**பூந்தளிர் மாண்புபெற வாழ்த்துகின்றேன்...**



கிளிநொச்சி மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறு பேற்றில் 1986ஆம் ஆண்டில் 1ஆவது மாணவர் சித்திபெற்றதில் இருந்தே தனக்கெனத் தனித்துவமான ஓரிடத்தைப் பெற்றுள்ள கல்விக்கூடம் கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம் ஆகும். இன்றும் பாரம்பரியத்தையும் புதுமையையும் எளிமையையும் கொண்டு சிறந்த தலைமைத் துவமும், நட்புறவான வழிப் படுத்தலும், அனுசரணையான முகாமைத்துவமும் வெளிப் படுத்தப்படுவதால், அர்பணிப்பும் கற்பித்தல் நிபுணத்துவமும் வாய்ந்த ஆரம்பப்பிரிவு அசிரியர் குழாம் ஒன்று உருவாகியுள்ளது. இக் குழாத்தின் கற்பித்தல் முறைமை, வளங்களின் முன்வைப்பு வலயத்தின் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக விளங்குவதென்பது மறுக்கமுடியாது.

அந்தவகையில் இவ்வித்தியாலயத்தின் செயற்பாடுகளைத் தரிசிப்பதற்காக இவ்வருடம் ஜனவரி 07 இல் வருகைதந்து தரம் - 04 இல் இம்மாணவர்கள் பெற்ற புள்ளிகளை ஆராய்ந்தபொழுது ஒரு சிலரே புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளி களை பெறக்கூடிய அடைவுநிலையில் இருந்தார்கள். இதனை அதிபரிடமும் ஆசி ரியர்களிடம் கூறினேன். இதனைச் சவாலாக எடுத்துக்கொண்ட ஆசிரியர்களான திருமதி ந. அனுசியா, திருமதி ரே. மதீஸ்வரன் ஆகிய இருவரும் தமது விடாமுயற் சியின் வெளிப்பாடாக 48 மாணவர்களில் 6 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்குக் கூடுதலாகவும் 25 மாணவர்கள் 100 புள்ளிக்கு கூடுதலாக 12 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்றும் தம்மாலும் இயலும் என்பதை மீண்டும் ஒரு முறை வெளிப்படுத்தியுள்ளனர். இங்கு அதிபரின் அனுசரணையான அவதானிப்பும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் பெற்றோரின் ஊக்கமும் இப்பெறுபேறுகளை பெறு வதற்குத் துணையாகியுள்ளன.


மேலும் இம்மாணவரின் பெறுபேற்றுக்கு தரம் -1- 4 வரை கற்பித்த ஆசிரியர்க ளுக்கும் சிறப்பாக தரம் - 05இல் நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் சிறப்பான பெறு பேறுகளைப் பெற்றுக்கொடுத்த மாணவச் செல்வங்களுக்கும் இவர்களுக்கு அனுசர ணையாக இருந்த பெற்றோர், அதிபர் யாவருக்கும் பாராட்டி வாழ்த்துச் சொல்வது டன் பூந்தளிர் மலர் மாண்புறவும் வாழ்த்துகின்றேன்.

திரு. பொ. விஜயநாதன்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,
கரைச்சிக்கோட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அதிபரின் வாழ்த்துரை



கல்வியே மாற்றத்தின் திறவுகோல். எமது கல்வி முறைகளில் பெருமளவு மாற்றங்கள் தற்போது ஏற்பட்டு வருகின்றன. மரபு முறையில் இருந்து மாற்றங்களை நோக்கி சமூகம் இடம் பெயர்கின்றது. இவ்வசைவுக்கு உந்துசக்தியாக கல்வி வேண் டப்படுகின்றது. பொருத்தமான கல்வியை எமது சிறார்க ளுக்குப் பொருத்தமான வகையில் வழங்குதல் மூலமே சிறந்த சமூக அமைப்பைத் தோற்றுவித்தலில் நாம் பங்களிக்கமுடியும்.

கிளி/ திருவையாறு ம.வி. தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் பெருமளவு மாணவர்களைச் சித்தியடையச் செய்தலில் வெற்றி கண்ட பாடசாலை ஆகும். இத்தகைய பாரம்பரியத்தில் வீட்டுடன் சேர்ந்த கல்வி அமைப்பு முறையொன்றை திருமதி. சிவபாக்கியம் நடராசா அவர்கள் மேற்கொண்டு ஆசிரியப் பணியில் நிலைத்து நின்றார். அந்தக் காலப்பகுதியில் கற்றுத் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் இந்த வருடத்தின் புலமைப்பரிசில் பாராட்டு விழாவைப் பொறுப் பேற்றுக்கொண்டமை சிறப்பானது. எமது பாடசாலையில் தோன்றிய 48 மாணவர் களில் 06 மாணவர்கள் சித்திபெற்றும் 37 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இந்தவகையில் எமது பாடசாலை மாணவர்களைப் பாராட்டுகின்றேன். இப்பரீட்சைக்கு வழிகாட்டிய திருமதி ந. அனுசியா ஆசிரியருக்குப் பாராட்டுதல் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவரின் அர்ப்பணிப்பான முயற்சியும், மாணவர் ஆசிரியர் இடைத்தொடர்பு முறைகளும் வெற்றிக்குக் கால்கோளாயின. அத்துடன் இணை ஆசிரியர்களாகப் பணியாற்றிய திருமதி ரேணுகா மதீஸ்வரன் அவர்களும் மாணவர்கட்கு சிறந்தகல்வியை ஊட்டி மாணவர்களைத் தேர்ச்சி பெறச்செய்வதில் வெற்றிகண்டார். மேற்படி மாணவர்களை வெற்றி பெறச்செய்ய உதவிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் பாட சாலையுடன் இணைந்து வெற்றியை நோக்கி தடம்பதிக்கும் பணியில் இணைவார்கள் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துகின்றேன். எங்கள் பாடசாலையின் ஆரம்பப்பிரிவு பலமானதாகும். சிறந்த ஆசிரியர் வளத்தினைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் சிறந்த பெறுபேறுகள் எமது பாடசாலையின் வெளியீடுகளாகவே உள்ளன. புலமைப் பரிசில் பெறுபேறு வெளிவந்த நாட்களில் எமது பாடசாலையின் பெறுபேற்றினை அறிவதில் கல்வியியலாளர்கள் அதிக எதிர்ப்பார்ப்பினைக் காட்டுவதிலிருந்து இது புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேற்றம் நடந்த பின்னர் 2012 இல் மாவட்டத்தில் முதல் நிலையினைப் பெற்று தமது ஆற்றலை மீண்டும் வெளிப்படுத்தியிருப்பது சாதாரணமானதல்ல. அனைவருடைய ஒத்துழைப்பும் எமக்கு வாய்க்கப் பெறுகின்றபோது சாதனை மன்னர்களாக எமது பள்ளி மாணவர்கள் விளங்குவார்கள் என்பதனைக் கூறிக்கொள்கின்றேன். அந்தவகையில் பழைய மாணவர்களான இ. சசிபரன், கு. சதீஜன் இந்தப் பூந்தளிர் இதழுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருப்பதனைப் போல ஏனையவர்களும் பாடசாலையோடு ஐக்கியத்தினைப் பேணவேண்டும். பாடசாலை பற்றிய சரியான மனப்பதிவினைப் பெறுகின்றபோது இத்தகைய மனப்பாங்கு எல்லோரிடமும் தோன்றும். எனவே இத்தகைய பங்களிப்புக்கள் தொடர்ந்தும் எமது பாடசாலைக்குக் கிடைக்க வேண்டுமெனக் கூறுவதோடு 'பூந்தளிர்' மாணவர்களை அன்புடன் வாழ்த்தி அனைவரையும் பாராட்டுகின்றேன்.

திரு.ப. சிறிதரன்
அதிபர்,
கிளி/ திருவையாறு ம.வி.

**ஒரு கருத்தைப் பிடித்துக்கொண்டு அதை வெற்றிகரமாக அடைபவனை நான் மதிக்கிறேன். ஆயிரம் சிந்தனைகளை வைத்துக்கொண்டு ஏதும் செய்யாதவனை நான் மதிப்பதில்லை.**

- எடிசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் வாழ்த்துரை



எந்த ஒரு சமூகத்திலும் கல்வியானது அச்சமூகத்தின் பண்பட்ட நாகரிகத் தோற்றுவாயின் ஊற்று மூலமாகிறது. சமூகம், பொருளாதாரம், அரசியல், பண்பாடு முதலான துறைகளில் கல்வி முக்கியமான விசைப்படுத்தலாகும். தொடரும் மாற்றம், சமூக வளர்ச்சி, மனிதவள மேம்பாடு போன்றவற்றில் கல்வி பெருந்தாக்கம் செலுத்துகிறது. இந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிறு அங்கமாகவிருக்கும் எமது கிராமம் இம் மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியின் ஓர் சிறப்பான இடத்தைக் கொண்டுள்ளது. இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சியில் எமது வித்தியாலயம் பெரும்பணியாற்றுகிறது. குறிப்பாக தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் பெரும் செல்வாக்குச் செலுத்துவதில் எமது பாடசாலைக்கு நீண்ட ஒரு வரலாறு உண்டு என்பது யாவரும் அறிந்ததே.

இதற்குக் கருவூலமாக இருந்து செயற்பட்டவர் திருமதி சி. நடராசா (ஓய்வு பெற்றவர்) ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வளர்ச்சியானது இடம்பெயர்ந்த காலங்களில் சில ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டபோதிலும் மீள் குடியேற்றத்தின் பின் ஒரு சீரான வளர்ச்சிப்போக்கினைத் தருவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. கல்வியின் அமைப்பு நோக்கங்கள், பாடத்திட்டங்கள், கற்றல் - கற்பித்தல் முறைகள், புதுத் தேவைகள், புது நிலைமைக்கு ஏற்ப மாற்றமடைந்தாலும் எமது மாணவர்களுக்கு வளங்கள் கிடைப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். நாட்டிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்கள் சம சந்தர்ப்பங்கள் கிடைப்பதில் சிக்கல் நிலவுகின்ற போதிலும் விசேடமாக எமது மாணவர்கள் பல்வேறு உடல், உள நெருக்கடிகளின் மத்தியில் பல்வேறு துன்ப வடுக்களைச் சுமந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறான பல்வேறு சிக்கல்களின் மத்தியில் புலமைப்பரிசில் வெட்டுப் புள்ளியைத் தாண்டுவதற்கு மட்டுமன்றி அடிப்படைப் புள்ளிக்குக் குறைந்துசெல்லாது மாணவர்களின் அடைவு மட்டத்தை தக்க வைப்பதிலும் அரும்பணியாற்றிய ஆசிரியர்களான திருமதி ந. அனுசியா, திருமதி ரே. மதீஸ்வரன் ஆகியோரின் பணி அளப்பரியது.

2013 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை வாழ்த்துவதுடன் இலக்கை எட்ட முடியாதவர்களை நோக்கி "இது உங்கள் தோல்வியல்ல வெற்றிக்கான இலக்கை நோக்கிப் பயணிப்பதற்காக உங்கள் உயர்ந்த தயார்ப்படுத்தலுக்கான வழி" எனக் குறிப்பிட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையானது கற்றல் என்ற நோக்குடன் அறிவைப் பெருக்குவது மட்டுமன்றி; நல்லொழுக்கமும் நல்விழுமியப் பண்புகளும் கொண்ட சிறந்த சமூக சிந்தனையுடையவர்களான ஒரு சமூகத்தைத் தோற்றுவிக்கவேண்டும். அந்தவகையில் இப்பாராட்டு விழாவை முன்னெடுக்கவும், இம்மலரினை ஒரு வரலாற்று ஆவணமாக எமது வித்தியாலயத்திற்கு வழங்கவேண்டும் என்று பெருநோக்கோடு முன்வந்த பழைய மாணவர்களான இ. சசிபரன், கு. சதீஜன் அவர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் “பூந்தளிர்” வருடந்தோறும் பல சாதனைகளைத் தாங்கி வெளிவர வாழ்த்துகின்றேன்.

திருமதி ப. கேதீஸ்வரன்
பிரதி அதிபர்.
கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்.

**அதிஷ்டம் –**

**வாய்ப்பும் வகையான திட்டமும் சந்திப்பதுதான்**

- எடிசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுதித் தலைவரின் வாழ்த்துரை



எமது பாடசாலையின் தரம் - 05 மாணவர்களது புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேற்றினைப் பெருமையுடன் வெளிக்கொணரும் பூந்தளிருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இச்சிறார்களது முன்பள்ளிக் கல்வியும், தரம் - 01 இற்கான கல்வி நடவடிக்கைகளும் பெரும்பாலும் யுத்த சூழ்நிலையிலேயே கழிந்தது. இவர்களில் பெரும்பாலானோர் முன்பள்ளிக் கல்வியின் அனுபவத்தினைப் பெற்றிருக்கமாட்டார்கள் என்றே எண்ணுகின்றேன். தரம் - 01 இற்கான கற்றல் சூழ்நிலையும் நலன்புரி நிலையத்துப் பாடசாலைகளிலேயே கழிந்தது.

ஜோனுக்குக் கல்வி கற்பிப்பதற்கு முன் ஜோனைப் பற்றி அறிந்திருக்கவேண்டும்" என்ற சீனப் பழமொழிக்கு ஏற்ப மாணவர்கள் ஒவ்வொருவரையும் இனங்கண்டு கல்வி புகட்டுவதற்காக ஆசிரியை செல்வி சி. மதனிகா, தரம் இரண்டில் இம்மாணவர்களை எமது பாடசாலையில் பொறுப்பேற்றார். இவரது கற்பித்தல் தரம் - 02, தரம் - 03, தரம் - 04 வரை தொடர்ந்தது. அதேவேளை சமாந்தர வகுப்புக்களில் ஒன்றை திருமதி ந. அனுசியா தரம் - 03 இல் பொறுப்பேற்று தரம் - 05 வரை தொடர்ந்தார். செல்வி சி. மதனிகாவின் இடமாற்றத்தைத் தொடர்ந்து திருமதி ரே.மதீஸ்வரன் தரம் - 05 இல் இம் மாணவர்களைப் பொறுப்பேற்றார். இம்மூன்று ஆசிரியர்களதும் ஊக்கமுடனான கற்பித்தலினாலும் மாணவர்களது அயராத முயற்சியினாலும் பெற்றோர்களது ஒத்துழைப்பினாலும் இம்மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெறமுடிந்தது.

மேலும் எமது பாடசாலை அதிபர், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரது வழிநடத்தல்களும், தனது வலயத்தின் கீழ் உள்ள மாணவர்களது சிறப்புமிகு கல்விக்காக தனது ஆளுமைமிக்க ஆளணியினருடன் பணிபுரியும் எமது வலயக் கல்விப் பணிப்பாளரது மேற்பார்வையின் கீழ் எமது பாடசாலையில் 06/48 மாணவர்கள் சித்தியடைந்தும் 37இற்கு மேற்பட்ட மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றும் உள்ளனர். இவர்களது இப்பெறுபேற் றிற்கு உந்துசக்தியாக இருந்த ஆசிரியர்களை வாழ்த்துவதுடன், இம் மாணவர்கள் சகல கலைகளையும் கற்றுத்தேற எல்லாம்வல்ல இறைவன் திருவருள் கிட்டுவதாக!

"பூந்தளிர்" மேலும் பல சாதனை மாணவர்களைத் தன்னகத்தே பொறித்து வலம் வர நானும் என் துறைசார்ந்த ஆசிரியர்களும் உழைப்போம் என உறுதிகூறுகின்றேன்.

திருமதி அ. சிறிதரன்
வகுதித் தலைவர் (ஆரம்பப்பிரிவு).
கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் எண்ணத்திலிருந்து...

கிளிநொச்சி நிலம் பல சவால்களைக் காலத்திற்குக் காலம் எதிர்கொண்ட பூமி யாகும். துன்பங்களைச் சுமந்து எம் மாணவர்கள் வாழ்ந்தவர்கள். ஆனாலும் அதற் குள்ளும் "கல்வி வீரம்" கொண்டவர்களாக காலமெல்லாம் விளங்குவதும் இந்த மண் ணுக்குரிய மகத்துவமும் ஆகும். முக்கியமாக எங்கள் பாடசாலைக்குரிய பண்பாகவும் இது இருந்துவந்துள்ளது.

கிளி/ திருவையாறு மகா வித்தியாலயத்தில் நாம் அதிபராக இருந்தகாலத்தில், கற்றுத்தேறிய மாணவர்கள் இன்று சமூகத்தில் உயர்ந்த பதவிகளை வகிப்பதை நோக்கும்போது மகிழ்ச்சியளிக்கின்றது. அன்றைய காலகட்டத்தில் இப்போது இருப்பதனை விட பௌதிகவளம், ஆசிரியவளம் என்பன குறைவாக இருந்தன. ஆனால் அவை கல்வியின் முனைப்பான செயற்பாட்டில் பெரிதும் பாதிப்பினை ஏற்படுத்தவில்லை என்றே தோன்றுகின்றது. உலகம் இப்போது அசுரவேகத்தில் பயணிக்கின்றது. அந்தவகையில் எமது பாடசாலை இன்னும் சிறந்து விளங்குவதற்கு யாவரும் பங்காற்றவேண்டும் பாடசாலையின் வளர்ச்சி என்பது பலரது ஒருமித்த கூட்டு முயற்சியாகும். பாடசாலையினை வளர்த்தெடுப்பதென்பது கடினமான பணி. எனவே பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் தாமாக முன்வந்து பாடசாலையினை இன்னும் பெருமைப்படுத்த வேண்டும்.

உண்மையில் இன்றைய சமூகநோக்கில் பொதுநலனுக்காகச் செயற்படுவோர் அரிதாகவே உள்ளனர். அதற்கு நியாயமான காரணங்களும் இருக்கலாம். ஆனால் கல்விச் செயற்பாட்டில் எவரும் விலகியிருக்கக்கூடாது. கல்வியில் விழிப்பாக இருக்கும்போதே மாறும் உலகை வெல்லும் உத்தம மனிதர்களாக வாழமுடியும் என்பதனை உணர்ந்து அனைவரும் செயற்படவேண்டும்.

இந்தவகையில் எமது பாடசாலையின் புலமைப்பரிசில் வரலாறுகளைத் தாங்கி "பூந்தளிர்" எனும் இதழ் வெளிவருவது மகிழ்ச்சியினைத் தருகின்றது. புலமைப்பரிசில் பரீட்சையில் தனித்துவத்தினை ஏற்படுத்தி வருபவர்கள் எமது பாடசாலை மாண வர்கள். அந்தவகையில் 2013 ஆம் அண்டு சித்தியடைந்த இளஞ்சிட்டுக்களை வாழ்த்து கின்றேன். மேலும் எங்கள் ஒவ்வொருவருக்கும் எமது மனக்கோட்டையில் பாட சாலை பற்றிய கனவு நிறைந்துள்ளது. அந்தக் கனவினை நிறைவேற்றி பள்ளியின் உன் னதத்திற்காக இணைந்து செயற்படுவோம்.

திரு. மு. இராமச்சந்திரன்
முன்னாள் அதிபர்,
கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர்களின் வாழ்த்து...

பாடசாலைகள் சமூகமொன்றின் கருவூலங்களாக விளங்குகின்றன. சமூக இயக்கத்திற்கான விசைகளாக மனித சமூகத்தினைப் பாடசாலைகளே வழிநடத்தி வருகின்றன. அத்தகைய சிறப்பு உண்டாகுவதற்கு கல்வியினைப் போதிக்கும் நிறுவனங்களாக பாடசாலைகள் உள்ளமையே காரணமாகும். ஆயினும் பாடசாலைகள் யாவும் ஒரே தரத்தில் காணப்படாமை ஒரு குறைபாடாகவே கருதவேண்டியுள்ளது.

பாடசாலையின் சூழல், அமைவிடம், பௌதிகவளம், ஆளணி, பழைய மாணவர், பெற்றோர் பங்களிப்பு முதலானவை பாடசாலையின் தரத்தினைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக உள்ளன. இந்த உண்மையினை உணர்ந்து கிளி/ திருவையாறு ம.வி. சமூகம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்பது அவசிமானதாகும்.

கிளி/ திருவையாறு மகா வித்தியாலயத்திற்கு எமது மாவட்டத்தில் அழியாத இடம் உண்டு. எமது பள்ளியின் பெறுபேறுதான் மாவட்டத்தினை அடையாளப் படுத்துகின்ற பெறுபேறாக இருந்தன என்பதனை எவரும் மறுக்கமுடியாது. அத்தகைய நாட்களில் எமது பள்ளியோடு ஒட்டி உறவாடிய பழைய மாணவர்கள் என்ற வகையில் எமது பாடசாலை தொடர்பாக பலகனவுகளும் எதிர்பார்ப்புக்களும் எமக்குண்டு. அதன் சிறு முயற்சியாகவே "பூந்தளிர்" இதழுக்கான எங்கள் பங்களிப்பு அமைந்துள்ளது.

புலம்பெயர்ந்து, கடல் கடந்து வாழ்ந்தாலும் கலைமகள் உறையும் கலைக்கூடமான எமது பாடசாலை வெற்றிவாகை சூடவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். மாணவர்களும் தமது வாய்ப்புக்களைத் தவறவிடாமல் சாதனைகளை நிகழ்த்தவேண்டும். எமது பள்ளியில் கல்வி கற்று பழைய மாணவர்களாகப் பரந்து வாழும் அன்புச் சகோதரர்களும் பாடசாலையோடு இணைந்து உண்மையாக உழைக்கும்போது முன்மாதிரியான பாடசாலையாக எங்கள் பாடசாலை "மீண்டும் தொடங்கும் மிடுக்குடன்" பெருமை பெற்று விளங்கும்.

தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை சாதனைகளைத் தாங்கி வெளிவரும் இந்த "பூந்தளிர்" இதழ் பாடசாலையின் வரலாற்றின் பொக்கிஷமாகும். போருக்குப் பின்னரும் 2012 ஆம் ஆண்டு எமது பாடசாலை மாவட்டத்தில் முதன்நிலையினைப் பெற்றிருப்பது மகிழ்ச்சியினைத் தருகின்றது. இத்தகைய செயற்பாடுகள் எமது சமூகத்தினை மேலும் விழிப்படையச் செய்து, பாடசாலையின்பால் உறவினை ஏற்படுத்தும் என்பது உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/திருவையாறு ம.வி
# 5ம் ஆண்டு புலமைப்பரிசில்-2013



2013ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 70 புள்ளிகளிற்கு மேல் பெற்ற மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1986:** S.சுபாஸ்கரன்-மா.நி 4

**1987:** S.கோகிலவதனா-மா.நி 9, P.தர்சாயினி-மா.நி 12, R.மனோரஞ்சிதம்-மா.நி 12

**1988:** M.சுரேன்-மா.நி 2, S.கவிதா-மா.நி 6, T.சசிநந்தினி-மா.நி 9, R.இரமேஸ்கண்ணா-மா.நி 9



**1989:** S.பவதாரணி-மா.நி 1, R.அகல்யா-மா.நி 2, K.ஜெயாகரன் மா.நி 3, V.நிசாயினி-மா.நி 8, S.சந்திரகலா-மா.நி 10, S.சுதர்சனா-மா.நி 15, K.ரிசியந்தி-மா.நி 20, P.டயாளினி-மா.நி 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1990:** R.அஞ்சலா, T.கந்தசாமி, S.சாந்தகுமார், K.கிருபானந்தி, கு.கிருத்திகா, ந.சாந்தினி, சி.ரஜித்தாதேவி, R.ஜசீலன், N.சிவநளாயினி, S.சுபத்திரா, லோ.பிரதீபா, வி.தக்சிலாநிதி, சி.நிதர்சன், க.கலைமகள்.

1991ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 46 மாணவர்கள் சித்தியடைந்த நிலையில் 23 மாணவர்கள் எமது பாடசாலை மாணவர்கள்.



**1991:** சு.நிசாமினி, ப.தீபாஜினி, க.மலர்வதனா, ம.மேகலா, செ.பிரகாஷ், தி.சுதர்சினி, ப.வினோஜா, கா.யாழினி, வ.ஜெயந்தன், அ.தேவானந், அ.கணேசாணந், சி. பிரிஜியா, இ.குமாரலதன், ம.மேனகா, க.நிரஜ்குமார், இ.ஜெயகாந்தன், ச.தனுசா, சி.தயானந்தன், வி.செந்தில்வரன், ஜெ.மனோகரன், ப.வினுதா, கு. சோபாஜினி, ச. சஜீவன்.



**1992:**
L.லோகதீபா
P.அன்ரூகில்லின்
V.கலைச்செல்வி
S.நிமலன்
K.சதீஜன்
P.தாரணி
R.சசிபரன்
K.துஷ்யந்தி
S.சுகந்தன்
K.பிரபாகரன்
V.ராதிகா
S.மகீபன்
K.பிரதீபன்
K.சுபாஸ்கண்ணா
T.பிரகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2011:** B.பரணிதரன், Y.தமிழ்நிலவன்



**2012:** P.சாரலன் மா.நிலை-1, B.பகீதரன்-மா.நி 5, P.பிரியநிலா, P.பவித்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தி பெற்றோர் - 2013



கே. அபியுகா - 175



க.சரண்ஷி -154



மோ. நிர்சிகா - 170



சி. கிசாந் - 156



ஞ. தனோஷன் - 155




தி.யதுர்சா - 159

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1993:** R.அகிலன்-மா.நி 1, K.ராகுலன், P.மன்சூராஜ், S.உதயரேகா, J.கோபிநாத், R.ஜெயரூபன், R.கேமலதா, S.விஜயரூபன், P.பாமிலா, P.ஜெயந்தன், T.சத்தியன், V.சந்திரமோகன், S.நிரூசியா, K. கோபிநாதன், P.ஜீவன், V. மோகன்ராஜ், K.மோகன்குமார்.



**1994:** S.பார்த்தீபன், N. பிரசன்னா, S.யாழினி, S. சிவானி, N.டயந்தினி, A.விஜேந்திரன், M.தர்சிகா, N.தபோதினி, K. நிவேதிகா, P.மன்மதராஜ், M.கிறிஸ்தினா, T.சுகந்தினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1995:** S.சியாமா, K.ரதிதீபன், N.நித்தியவதனி, K.யோன்சன், K.பேரின்பநாதன், N.தயானந்தன், P.தினேஸ்குமார், G.கிரிசாந்தி, P.வஜிதரன், Y.மகீரதி.

**1996:** V.தனுசா, K.யசோதனி, R.வாசினி, V.இளங்குமரன், B.கேதீஸ்வரன், N.தர்சனா, P.வினோதன்

**1997:** G.ஜலஜா-மா.நி 1, K.கௌசீகன், M.பாலமுரளி, N.தாட்சாயினி, M.நிவிதா, S.மோகனவேணி

**2001:** G.நிலானிதன், R.சதீஸ், T.துசாந், K.தர்சன், N.சுடர்விழி, S.தமிழேந்தி

**2002:** S.துவாரகா-மா.நி 1, J.காண்டீபன், K.கோகிலவாணி, S.கஜனி, R.பிரியதர்சினி, R.பாதுஷா, R.யதர்சனா, T.அம்பிகா, R.பகீரதன், B.பபிலன், Y.கௌசல்யா.



**2003:** S.தனுசன்-மா.நி 3, R.அனுஷ்கா, M.நவினன், P.சங்கீதன், V.அரவிந்தன், U.பிரசன்யா, K.ஐங்கரன், S.பிரசாந்தி, S.இன்பமதி, K.கஜீபன்.



**2004:**
நா. சுடர்வண்ணன்-மா.நி 1
கெ.ரினுசாந்
மு. பிசாந்தினி
சொ. கோபினா
க. தருணிகா
ச.ஜெயமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2005:**
K.துசிகரன்
K.சேயோன்
P.லதுசன்
S.உதயவர்மன்
V.சுஜித்தா



**2006:** T.துசன்யா-மா.நி.3, N.துவாரகன், S.லக்சனா, R.அமலன்



**2007:** N.சாமந்தி-மா.நி 2, S.சஞ்சயன்-மா.நி 7, S.துவாரகா-மா.நி 8, S.கோமளகாசன், T.டிசாந், M.சாண்டிலயன், N.கலையரசன், N.நிதுசன்.



**2008:** S.சஞ்சீவன், P.ரதீபன், M.மதுவந்தி, V.கீர்த்திகா, S.சாரங்கன், T.தனுஜன், P.விதுசன், K.டிலக்சனா, M.சுபேஸ்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**2009:** சு.றதோஜினி, செ.டியானி, சு.அர்ச்சனா, தி.நிலானி, ம.தேனுகா, மு.சோமிலன், சௌ.குருமதி ச.நிதுசன், சு.அனோஜ், ப.கபிலா, மு.கயாளினி, பி.பிரதீபா.



**2010:** N.அபிராமி-மா.நி 2 K.கிருசாந்-மா.நி 6 T.நிதுசாந்-மா.நி 9, K.காங்கேயன், K.நிசாளினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் இவ்வாறான கல்விச் சாதனைகளோடு, இணைப்பாடச் செயற்பாடுகளாலும் எங்கள் பாடசாலை உயர்ந்து விளங்கவேண்டும் என்பதோடு இதற்காக பழைய மாணவர்கள் அனைவரும் பாடசாலையோடு நேசக்கரம் நீட்டி கல்லூரி மாதாவின் பாதம் பணிந்து ஒன்றுபட்டுச் செயற்படுவோம் "பூந்தளிர்" கிளையாகி, பெருமரமாகி பெருநிழல் பரப்ப வாழ்த்துகின்றோம்.

இ. சசிபரன், கு. சதீஜன்
(1992 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த
பழைய மாணவர்கள்)

**புகழ் எம்மிடம் இயல்பாக வரவேண்டும் அவ்வாறு எம்மைத் தேடிவரும் புகழில்தான் பெருமை உள்ளது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய கலாநிதி இ. அகிலன் அவர்களின் அனுபவப் பகிர்வு

எனது நினைவலைகளைக் கிட்டத்தட்ட இருபது வருடத்திற்கு முற்பட்ட காலத்திற்கு இட்டுச் செல்கிறேன். ஆம்! நான் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவன். போர்வீரர்கள் பாசறையில் பயிற்சி எடுப்பதுபோல நானும் எனது ஆசிரியை சிவபாக்கியம் அவர்களின் பயிற்றுவித்தலில் பயின்ற காலமது. பாடசாலையில் வகுப்பாசிரியர், மாலைநேரத்தில் பிரத்தியேக வகுப்பாசிரியர் போல பணமோ பொருளோ எதனையும் பாராது அன்று என்னை வழிநடத்திய ஆசிரியர் களுக்கு என்றும் கடமைப்பட்டவனாகின்றேன்.

மேலும், கல்வியில் அக்கறையை ஊட்டி வளர்த்த எனது பெற்றோர்கள் மற்றும் ஊரவர்களின் பங்களிப்பும் அளப்பரியது. அன்று புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எல்லோருக்கும் ஒரு கனவு இருக்கும். அதாவது அகில இலங்கை ரீதியில் திறமைச்சித்தி பெற்றால் யப்பான் நாட்டுக்கு சுற்றுலாச் செல்லலாம் என்பது. ஆகவே எமது வகுப்பில் முன்னிலையில் உள்ள மாணவர்கள் எல்லோரும் அந்தக் கனவுடன் கருசனையுடன் கல்வி கற்போம். ஆயினும் அந்தக்கனவு நனவேற வில்லை என்ற வருத்தம் அப்பொழுது எனக்கு இருந்தது. எனினும் 172 புள்ளிகளைப் பெற்று நான் மாவட்டத்தில் ஒரு வைத்தியராகக் கடமையாற்றுகிறேன் என் றால் அதற் கான முதற்படி அன்றே இடப்பட்டுவிட்டது. அதற்கு ஏதுவாக இருந்த எனது ஆசிரி யர்கள், பெற்றோருக்கு என்றும் நன்றியாகவிருப்பேன்.

அதேவேளை பாடசாலையின் வரலாற்றில் 1986-2013 வரலாறுகளைத் தாங்கி வெளிவரும் 'பூந்தளிர்' இதழ் காலத்தின் தேவையாகும். இதற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு; இந்த முயற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

வைத்திய கலாநிதி இ. அகிலன் (பழைய மாணவன்)
மாவட்ட பொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் முதல்நிலை மாணவி கூறுவது என்ன?

கிளி/ திருவையாறு ம.வி. யில் 2013ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். எனது வெற்றி என்பது தனித்து எனது முயற்சியினால் மட்டும் பெறப்பட்டதன்று. பல்வேறு சமூகங்களின் கூட்டு முயற்சியாகும். அந்தவகையில் எனது இவ் மகிழ்ச்சிக்கு வழிகோலிய உள்ளங்களை ஒருகணம் தொட்டுச் செல்ல எனக்கு ஆசை.

கொடிய போர் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்த அக்காலகட்டத்திலே திருமுறிகண்டி தென்இந்திய திருச்சபை பாலர் பாடசாலையில் எனது முன்பள்ளி வாழ்க்கையைத் தொடங்கினேன். ஆனால் அதனைத் தொடரமுடியாத நிலையில் பல இடப்பெயர்வுகள் வெள்ளையுடை தரித்து பள்ளியில் கால்பதிக்க வேண்டிய நாளில் கொடிய எறிகணையால் சிறிய அங்கத்தை இழந்தேன். முகவரியற்ற முகாம் பாடசாலையில் முதலாம் தரத்தைக் கழித்தேன். 2010ஆம் ஆண்டு தரம் இரண்டில் எனது சொந்தப் பாடசாலையான கிளி/திருவையாறு மகா வித்தியாலத்தில் கால்பதித்தேன். அந்தவேளை என்னை அன்னை போன்று அரவணைத்து அறிவு புகட்டியவர் செல்வி. சி. மதனிகா ஆசிரியர் ஆவார். அவரைத் தொடர்ந்து திருமதி. ந. அனுசியா ஆசிரியர் என்னை தரம் மூன்றில் இருந்து ஐந்துவரை அன்பாக வழிநடத்திக் கல்வியறிவூட்டினார். இவர் கற்றலில் மட்டுமன்றி இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் என்னை ஊக்குவித்து கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய திருக்குறள் மனனப் போட்டியில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற வழிகாட்டினார்.

நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற பெரும்பங்காற்றியவர் நாம் பூபதி ரீச்சர் என அன்பாக அழைக்கும் திருமதி. நடராசா சிவபாக்கியம் ஆவார். அவர் எமக்கு அன்பாக பல அறிவுரைகளைக் கூறி கற்றலுக்கு ஊக்கம் கொடுப்பார். நாள் முழுவதும் எம்முடனேயிருந்து கசடறக் கற்கவும், மகிழ்வுடன் கற்கவும் உதவுவார், இவரது அன்பும், அரவணைப்பும் தொடர்ச்சியான பயிற்சியுமே நாம் சித்திபெற உதவின. அவர் கற்றலில் மட்டுமன்றி நற்பண்புகளையும் நற்பழக்க வழக்கங்களையும் அன்றாடம் புகட்டுவார். காலையில் நாம் கல்விகற்கச் செல்லும்போது தனது தள்ளாத வயதிலும் எமக்காகப் பல தகவல்களைத் திரட்டி எமக்குப் புகட்ட வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பார். இவரது சேவைக்கு நான் மட்டுமன்றி எமது சமூகமே நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

எனது கற்றலுக்குத் துணையாய் நின்ற அனைத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கு இணங்க தாங்கள் கௌரவிக்கப்பட்ட அதே அரங்கில் நாமும் பாராட்டப்பட வேண்டும் என்ற பெருநோக்கோடு எமக்கு பாராட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாவை நடாத்த முன்வந்த பழைய மாணவர்களான திரு. இராமச்சந்திரன் சசிபரன், குகானந்தன் சதீஜன் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். இவர்களது பணி சமூகச் சிந்தனையும், நல்லெண்ணமும் கொண்ட செயற்பாடாகும். இதனால் நாம் பயனடைவது மட்டுமன்றி எல்லோருக்கும் சமூகம் சார்ந்த நல்லெண்ணத்தையும், சமூகப் பொறுப்பையும் ஏற்படுத்துவதாகும். எந்தவொரு சமூகத்திலும் அங்குள்ள பாடசாலை சிறப்பிடம் பெறுகிறது. எனவே எமது பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுக் கொடுக்கவும் சமூகத்திற்குப் பயனுடையவராய் மாறவும் மேலும் பல சாதனைகள் படைத்துப் பெருமை சேர்ப்பதே எனது பேரவாவாகும். எனது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த வாய்ப்பளித்த வருடாந்தம் துளிர்விடும் பூந்தளிருக்கும் எனது நன்றிகள் பற்பல.

செல்வி கேதீஸ்வரன் அபியுகா
கிளி/ திருவையாறு ம.வி.
தரம் 5A

**நான் ஒன்றை அடைய நினைத்தால் எத்தனை**
**சோதனைகளுக்கும்**
**சளைக்கமாட்டேன். முயல்வேன் முயல்வேன்**
**அடையும் வரை முயல்வேன்**

- எடிசன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்மை விருந்தினர் மா. கணபதிப்பிள்ளை அவர்களின் கருத்துரை...

கிளிநொச்சி மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டுகளை அண்மித்து திருவையாறு குடியேற்றம் கொடுக்கப்பட்டது. அக்குடியேற்றத்தின் பின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுடன் 1974ஆம் ஆண்டு யூன் மாதம் 18ஆம் திகதி திருவையாறு மகா வித்தியாலயம் உருவாக்கப்பட்டது. படித்த வாலிபர் திட்டமாகக் கொடுக்கப்பட்ட திருவையாறு குடியேற்றத் திட்டத்தில் உள்ளவர்களில் பிள்ளைகளும், ஏலவே கோவிந்தன் கடைச்சந்தியில் இருந்து இரணைமடுவரை குடியிருந்தவர்களின் பிள்ளைகளும், படிப்படியாக இங்கு படிக்கத் தொடங்கினார்கள். அதைத் தொடர்ந்து 2ஆம், 3 ஆம் பகுதிகளில் குடியேறிய படித்த வாலிபர், மகளிர் திட்டங்களில் குடியேறியோரின் பிள்ளைகள் உட்பட 30 வீட்டுத்திட்டம் வரையுள்ளவர்களின் பிள்ளைகளும் அக்காலப்பகுதியில் இப்பாடசாலையில் கல்வி கற்றனர்.

இப்பாடசாலையின் ஆரம்ப அதிபராக திரு. அருணாசலம் அவர்கள் கடமையாற்றினார்கள். படிப்படியாகப் பாடசாலை வளர்ச்சிகண்டு வந்தது. 1986ஆம் ஆண்டு முதலாவது மாணவன் இப்பாடசாலையில் 5ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் பாடசாலையின் செல்வாக்குப் படிப்படியாக உயர்ந்தது. 1983ஆம் ஆண்டு இப் பாடசாலையில் ஆசிரியையாகச் சேர்ந்த சிவபாக்கியம் நடராசா அவர்களின் கற்பித்தல் உத்திகளும் அர்ப்பணிப்பான சேவையும் தொடர்ந்து புலமைப்பரிசில் மாணவர்கள் ஆண்டுதோறும் வெற்றிபெறக் காரணமாக இருந்தது என இப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றார்கள்.

எங்கே ஆசிரியர்கள் சுயநலத்துக்கு அப்பால் பொதுநலத்தோடு தமது கற்பித்தலில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றார்களோ. அங்கே வெற்றி கிட்டியுள்ளதைப் பல உதாரணங்களால் நாம் காணலாம். எமது கல்வி வளர்ச்சி என்பது வெறும் பாடசாலைக் கட்டடங்களினதும் நில அளவினதும் வளர்ச்சியில்லை. மாறாக அர்ப்பணிப்பான அதிபர்களினதும் ஆசிரியர்களினதும் சேவைகளாகும். பூரணம்பிள்ளை என்ற தனிமனிதனும், அக்கால ஆசிரியர் குழாத்தின் அர்ப்பணிப்பான சேவையாலும் உயர்வு பெற்று நிற்பது ஹாட்லிக் கல்லூரி. அதேபோல் ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் சேவையாலும், அவரது ஆசிரிய ஆளணியின் அர்ப்பணிப்பான சேவையாலும் உயர்வு பெற்று நிற்கின்றது ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. ஜெயரத்தினம் அவர்களதும் அவரது ஆசிரிய ஆளணியாலும் சிறந்து விளங்கியது மகாஜனக் கல்லூரி. எட்வேட் நவரத்தின சிங்கத்தாலும் அவரது ஆசிரிய ஆளணியாலும் சிறந்து விளங்கியது நெடுந்தீவுக்கல்வி, தம்பரால் உயர்ந்தது. வேலணைக்கல்வி என்று பட்டியல் இட்டுச் செல்லலாம். இந்தப் பட்டியல் காட்டும் உண்மை என்னவெனில் தூரநோக்கோடு செயற்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் வெற்றிபெற்றார்கள் என்பதேயாகும்.

இந்தநிலையிலே தான் நாம் திருவையாறு மகா வித்தியாலய அதிபர்கள், ஆசிரியர்களை நோக்குதல் வேண்டும். இன்று இந்தப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குக் கௌரவிப்பும், மலர்வெளியீடும் நிகழ்கிறது கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் புளகாங்கிதம் அடைந்திருக்கும் நிலைக்கு யார் காரணம் என்று கேட்டால் திருமதி சிவபாக்கியம் நடராசா என்ற ஓய்வுபெற்ற ஆசிரியரையே சாரும்.

யுத்தத்தில் எல்லோரும் தங்கள், தங்கள் சொத்துக்களையே பாதுகாக்க முயன்றார்கள். இந்த ஆசிரியை தான் கற்பித்து வெற்றிபெற்ற மாணவர்களின் படங்கள், பரீட்சை முடிவுகளுடன் ஒன்றித்திருந்தார். 1986 இல் இருந்து இவ்வாண்டுவரை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரங்களையும் பிரசுரிப்பதில் அக்கறை காட்டியுள்ளார். அதற்குத் துணை நிற்பவர்கள் 1992இல் இப்பாடசாலையில் கல்விகற்று அவ்வாண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இ. சசிபரன், கு. சதீஜன் என்ற இரண்டு மாணவர்களும் தான் என்ற செய்தியும், அதைச் செயற்படுத்த 1990ஆம் ஆண்டு சித்திபெற்ற மாணவன் இராமச்சந்திரன் ஜசீலன் தான் என்ற செய்தி பெருமைக்குரியது. பாராட்டுக்குரியது. பின்பற்றவேண்டியது.

எந்தப் பாடசாலைகளோடு பழைய மாணவர்கள் அக்கறையோடு செயற்படுகின்றார்களோ அந்தப் பாடசாலைகள் உயர்வுபெற்று விளங்குவதை நாம் அவதானிக்கலாம். தாம் பெற்ற இன்பத்தை 21 ஆண்டுகளுக்குப் பின் தமது தம்பி, தங்கைகள் பெறும் வெற்றியோடு ஆனந்தப்படும் இந்த உள்ளங்களையும் பாராட்டவேண்டும்.

1991ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்திலேயே 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர், மொத்தமாக 46 மாணவர்கள் அதில் 23 ஆம் மாணவர்கள் திருவையாறு மகா வித்தியாலயத்தில் இருந்துதான் சித்தியடைந்தார்கள் என்ற செய்தி இப்பாடசாலையின் முத்தாய்ப்பான செய்தியாய் இங்குள்ளவர்கள் பேசுகின்றார்கள். கிளிநொச்சி என்றால் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் திருவையாறு பாடசாலை என்று பேசுமளவுக்குப் பெருமை சேர்த்தது இந்தப் பெறுபேறு என்றால் மிகையில்லை.

இன்று இந்தப் பாடசாலை 1C தரமுள்ளதாகக் காணப்படுகிறது. க.பொ.த. உயர்தரத்தில் கலை, வர்த்தகப் பிரிவுகளுடன் துலங்கும் இப்பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் (2012) 3A (வர்த்தகப்பிரிவு) சித்திபெற்றுள்ளார் என்ற செய்திகள் பாடசாலையொன்றின் வெற்றிக்கு அடையாளத் தகவல்களாகக் காணப்படுகின்றது.

இத்தகைய நிலையில் இவ்விடத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் பங்கெடுக்கும் மாணவர், ஆசிரியர், பெற்றோர் வகிபாகம் பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதாகும்.

**மாணவர்கள் :**

இன்று மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு எதிராகப் பல கவனக் கலைப்பான்கள் செயற்படுகின்றன. சமூக ஆர்வலர்கள் குறைந்து சமூகத்தை நாசம் செய்து சுயநல அபிவிருத்தி தேடும் புல்லுருவிகள் ஊடுருவிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் உந்தலைத் தூண்டும் நூல்நிலையங்கள் கணினி மையங்கள் எல்லாம் எமது கிராமங்களில் இல்லை. இந்தநிலையிலே தான் மாணவர்களாகிய நீங்கள் மிக முக்கிய மான போட்டிப் பரீட்சைகளுக்காகக் கற்கின்றீர்கள்.

அறிவான சொற்களைத் தேடுங்கள். அறிவுள்ள ஆசிரியர்களைத் தேடுங்கள். கற்கும் முறைகள், உபாயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். கற்பதிலேயே நாட்ட மாக இருங்கள். சோக்கிரட்டீஸ் கேட்பது போல் ஏன்? எதற்காக? எப்படி? என்ற கேள்வி களோடு ஒவ்வொன்றையும் நோக்குங்கள்.

இன்று எம்மில் புத்தாக்கம் புரியும் மாணவர்கள் குறைந்து விட்டார்கள். இளம் கண்டுபிடிப்பாளர்கள் அருகிவிட்டார்கள். ஞானசம்பந்தர்கள் தோன்றுவதாய் இல்லை என்ற கண்டனங்கள் காணப்படுகின்றன. நாளைய சந்ததியினராகிய நீங்கள் தான் அதைப்போக்க வேண்டும். கற்றல் என்பது காலத்திலே செய்யப்படவேண்டி யது. பின்பு செய்யலாம், நாளை செய்யலாம் என்பதெல்லாம் கற்றலுக்குப் பொருந் தாது.

இன்றுள்ள கற்றல் முறையை தேர்ச்சிமட்டக் கற்றல் முறைமை என்கிறார்கள். எனவே குறிப்பிட்ட வயதுக் காலத்தில் அந்த தேர்ச்சிக்குரிய குணாம்சங்களை மாணவர்கள் பெறவேண்டும். 1990 ஆம் ஆண்டுவரை அகில இலங்கை ரீதியான போட்டிப் பரீட்சைகளில் தமிழ் மாணவர்கள் மிகச் சிறப்பாகத் துலங்கினார்கள். அகில இலங்கை மட்டத்தில் முதல்தர புள்ளிகளைப் பெற்றார்கள். இன்று அந்நிலமை அருகிவிட்டது. ஏன்? என்று ஆராயவேண்டும்.

உங்களை நாசமாக்கும் போதைவஸ்த்துக்கள், கையடக்கத் தொலைபேசிகள், 'நெற்கபே' கள் எல்லாம் எமது கலாசாரத்தைச் சீரழிப்பதோடு; எம் மாணவர் சமூகத் தையே நாசமாக்கப் பிரயத்தனம் எடுத்துள்ளன. இந்தக் கவனக் கலைப்பான்கள் எல்லா வற்றையும் கடந்து பிரகாசிக்கவேண்டிய தேவை எமக்குண்டு. எமது இளம் சந்ததிகள் அறிவாற்றல் ஒன்றாற்தான் எம் சமூகம் விழுந்த இடத்தில் இருந்து எழுந்து நிற்க முடியும். கற்றல் ஒன்றாற்தான் நாம் முன்னேறமுடியும் என்பதை எம் மாணவர்கள் உணர்ந்து அதனால் முன்னேற வழிகாண வேண்டும்.

கற்கும்காலத்தில் சமவயதுக் குழுவினரால் சீர்குலையும் சந்தர்ப்பங்கள் அநேகம். எனவே நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள். 'இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற வள்ளுவர்வாக்குக்கு ஒப்பானவர்களாக அந் நண்பர்கள் காணப்பட வேண்டும். மனதை ஒருநிலைப்படுத்தி கற்றலில் நாட்டங்காட்டினால் நீங்கள்தான் முதல் மாணவர்க ளாகத் துலங்குவீர்கள்.

கற்பதற்குப் பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படவேண்டும் என்கிறார்கள். உங்களது பாடத்திட்டத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் குறிப்பிட்ட பரீட்சை வினாத்தாள்கள், விடைத்தாள்களைப் பார்த்துக்கொள்ள வேண் டும். மற்றும் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்படும் ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டிகளை நீங்கள் பெற்று வாசித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பெற்றால் உங்களால் மிகச்சிறப்பான பெறுபேறுகளைத் தரமுடியும் என்கின் றார்கள்.

ஏதாவது ஒரு அழகியல் கலையைக் கற்றுக்கொள்ளுங்கள். ஆடுதல், பாடுதல், இசைத்தல் போன்ற ஏதாவது ஒன்றில் சிறப்பாகத் துலங்கப்பாருங்கள். ஒரு கைத்தொழி லில் நாட்டங்காட்டுங்கள். கற்றலோடு அழகியலும், கைத்தொழிலும் சேரும்போது, கவனக்கலைப்பானுக்கான நேரம் உங்களுக்கு வராது. உங்களது புலமைகளை மற்ற வர்கள் பாராட்டப் பாராட்ட நீங்கள் படிப்படியாகப் படிப்பீர்கள் என்று குறிப்பிடப் படுகிறது.

கற்றற்புலமை பார்த்துக்கற்றல், கேட்டுக்கற்றல், பயிற்சிகளால் தொட்டுணர்ந்து கற்றல் என்ற மூன்று வகைகளில் நிகழ்கின்றது. சிலர் பார்த்துக்கற்க விரும்புவார்கள். சிலர் கேட்டுக் கற்க விரும்புவார்கள். சிலர் பயிற்சிகளால் செய்து பார்த்தே விளங்கிக் கொள்வர். ஒவ்வொரு தனிமனிதனும் கற்கும்போது இம்மூன்று வகைக்கற்றலிலும் நாட்டம் காட்டவேண்டும். நாம் நமக்காகக் கற்கவில்லை. நாளைய நம் சந்ததி, நம்நாடு நம்மால் உயர்வடைய வேண்டும் என்ற வேணவாவுடன் கற்றல் வேண்டும். அதற்காக முயற்சியுங்கள் வெற்றி பெறுவீர்கள்.

**ஆசிரியர்கள் :**

ஆசிரியர்கள் முன்மாதிரி மனிதர்களாக விளங்கவேண்டும்.

"உவப்பத்தலைக்கூடி உள்ளப் பிரிதல்

அனைத்தே புலவர் தொழில்" என்பார் வள்ளுவர். ஆசிரியர் ஒருவன் தொடர்ந்து கற்பிக்கமாட்டானா? என்று மாணவர்களை ஆசைகொள்ளச் செய்தல் வேண்டும். மீண்டும் இவ்வாசிரியர் எப்போ வருவார். எமக்குக் கற்பிப்பார் என்று மாணவர் ஏங்கி நிற்கும் நிலையை உருவாக்கிவிட்டால், நீங்கள்தான் நல்லாசிரியர்.

கற்பித்தலாலும், நடத்தையாலும் மாணவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பின் அவர்களின் உயர்வில் நாம் பெருமையடைய வேண்டும். மாணவர்களின் சிறப் பான துலங்கல்கள்தான் ஆசிரியர்கள் உயர்வுப் படிக்கட்டுக்கள். தமக்காக வாழாது பிறர்க்காக வாழ்ந்துகாட்டும் ஆசிரியர் என்றும் அழிவதில்லை. அவர் மரணத்தை வென்றவன்.

'ஒரு சாதாரண ஆசிரியர் சொல்கின்றார். ஒரு நல்ல ஆசிரியர் விளக்கிச் சொல்கின்றார். ஒரு சிறந்த ஆசிரியர் செய்து காட்டுகின்றார். மிகச்சிறந்த ஆசிரியர் ஊக்குவிக்கின்றார்' என்ற (WILLIAM ARTHUR WARD) வில்லியம் ஆர்தர் வாட்டின் குறிப்பை எல்லா ஆசிரியர்களும் மந்திரமாகக் கொள்ளவேண்டும்.

பொரித்த மீனுக்குப் பின் பூனை போவதுபோல் பணத்துக்குப் பின் போதும் பிரத்தியேக வகுப்புக் கலாசாரம் ஒன்று எம்மிடையே ஏற்பட்டுவிட்டது. "பணத் துக்குக் கல்வியை விற்பதும் ஒருவகை விபசாரமே" என்ற கருத்துக்கள் எம் ஆசிரிய பரம்பரை எமக்குச் சொல்லித்தந்தவை. அவர்களின் அர்ப்பணிப்பான சேவையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இன்றைய கல்வியியலாளர்கள் வாழ்கிறார்கள். எனவே ஆசிரியர்கள் தமது மாணவர்களினது உச்ச வளர்ச்சியில் கண்ணும் கருத்துடன் செயற்படல் வேண்டும்.

மாணவர்களின் கற்றல் தேடல்களுக்கு உதவுதல், தேடச் செய்தல், ஊக்குவித்தல் போன்ற பாங்குகளில் மாணவர்களின் கற்றலைத் தூண்டவேண்டும். "காவேட் காடினர்" அவர்கள் குறிப்பிடுவதுபோல் மாணவர்களிடம் காணப்படும் பன்முக நுண்மதியை அடையாளங்கண்டு அவனையோ / அவளையோ அவர்களிடம் காணப் படும் தேர்ச்சிக்குப் பொருத்தமாக வளர்த்துவிட வேண்டும். 'அவனை அவனாக வளர்த்து விடுங்கள்' என்ற ரூசோவின் கல்விச் சிந்தனையும் இதனுள் அடங்கும்.

எல்லாம் தெரிந்தவரல்ல ஆசிரியர். எது எங்கோ இருக்கின்றது என்பதைத் தெரிந்தவர் ஆசிரியர் என்பார்கள். கற்றுக்கொண்டே இருப்பவர்கள் ஆசிரியர்கள். அறிவை இற்றைப்படுத்தி மாணவர்களுக்குப் பொருத்தமாக வழங்கும் தன்மை ஆசிரியர்களுக்குரியது. அவ்வாறு அறிவுபெற்ற மாணவர் இருவர்தான் இன்று தாம் கல்வி கற்ற ஆசிரியையைத் தேடி அவரிடம் இருந்த தரவுகளைத் திரட்டி ஒரு புத்த கமாக வெளியிட்டு உங்களை விழிப்புடையவராக்குகின்றார்கள் என்றால் இத்தகைய மாண வர்களை உருவாக்கி விடுங்கள். அதுதான் உங்கள் பணி!

"மன்னவனும் நீயோ வடநாடும் உன்னதோ" என்று கம்பன் கேட்டான் என்றால் அந்தக் கர்வத்துக்குக் காரணம் அறிவு. எனவேதான் ஆசிரியன் என்பான் அறிவால் மற்றவர்களை வெல்லவேண்டும் எனப்படுகிறது. பண்பட்ட சமூகத்தைக் கட்டி வளர்க்க நல்லாசிரியர்களின் தேவை இன்று அவாவப்படுகின்றது.

**பெற்றோர்கள் :**

ஒரு சமூகத்தின் உயிர்நாடிகள் விழிப்புள்ள பெற்றோர்களே. தன்பிள்ளையை சான்றோனாக்கி சபை நடுவே முந்தியிருக்கச் செய்யும் பொறுப்பு பெற்றோருக்குரியது. வள்ளுவர் சொல்வார்.

'இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல்' என்ற பெருமையைப் பெறும் பெற்றோர்தான் பிள்ளைகளின் கற்றல் தேவைகளை அறிந்து அவற்றைப் பூர்த்திசெய்பவர் பெற்றோர்கள். நல்ல பாடசாலை நல்லாசிரியர்களைக் காண்பிப் பவர்கள் பெற்றோர். அதனால்தான் "மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற படிமுறை பிறந்தது என்பார்கள்.

கண்ணுக்குப் புலப்படும் வகையிலும் கண்ணுக்குப் புலப்படாத வகையிலும் கற்றல் நிகழும் இடங்களை சரியாக இனங்கண்டு பிள்ளைகளைக் கற்கத் தூண்டுதல் பெற்றோர் கடன். ஒரு ஆய்வு காணப்படுகின்றது. 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட் சையில் சித்தியடையும் சகல மாணவரும் க.பொ.த சா/தரம், க.பொ.த. உ/தரம் போன்ற வகுப்புக்களிலும் சிறப்பாகக் துலங்கவில்லை. காரணம் 5ஆம் தரம் வரை பெற்றோர் பிள்ளைகளில் காட்டும் அக்கறை நிலையைப் படிப்படியாகக் குறைப்பதே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் வளர, வளர பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து விலகி சம வயதுக் குழுவினர் போன்றோரின் செல்வாக்குக்குட்படுவதால் பாரிய இடைவெளி ஒன்று ஏற்படுகின்றது. பெற்றோர் விரும்பியோ விரும்பாமலோ பிள்ளையின் நடத்தையில் கண்ணும் கருத்துமாக க.பொ.த (உயர்தரம்) வரை கற்றல் நடத்தைக்குத் தூண்டவேண்டும்.

அவர்கள் ஆசிரியர்களோடு நெருக்கமான உறவுகொண்டு மாணவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்படவேண்டும். பாடசாலை என்பது மாணவர், ஆசிரியர், பெற்றோர் என்ற முப்பிரிவினரதும், அயராத முயற்சிக்குள்ளாகும் இடம். இந்த மூன்றில் யாராவது ஒருவர் வினைத்திறன் குன்றின் அந்தப் பாடசாலை சிறப்பாகப் பிரகாசிப்பதில்லை.

நல்ல பெற்றோர் ஆசிரிய சங்கமும், நல்ல பழைய மாணவர் சங்கமும் உள்ள பாடசாலைகள் இலங்கையில் வெற்றிபெற்ற பாடசாலைகளாக உள்ளன. மாணவரிடம் இருந்து சமூகம் எதிர்ப்பார்ப்பது என்ன? நல்ல பெறுபேறுகளைப் பெறுதல், நன் நடத்தையுள்ள மாணவர்களாக மாணவர்கள் திகழ்தல். இந்த இரண்டும் பெற்றோர்கள் விழிப்புணர்வுள்ள பாடசாலைகளிலே தான் நிருபனமாகியிருக்கின்றது.

வீட்டுச் சூழலையும், கற்றலுக்குப் பொருத்தமாக வைத்திருப்பது பெற்றோர் கடன். 13 ஆண்டுகள் எந்தக் கஷ்டம் வந்தபோதும் பிள்ளையைக் கற்றலில் ஆர்வம் காட்டச் செய்யவேண்டும். அதற்காகப் பெற்றோரின் கஷ்டங்கள், பொருளாதாரப் பிரச்சினைகள் பிள்ளைகளுக்குத் தெரியக்கூடாது என்பது அல்ல. அதுவும், அவர்களுக்குத் தெரியவேண்டும். இத்தனை நெருக்கடிகளின் மத்தியில் எம் பெற்றோர் எமது கல்வியில் அக்கறையுடன் உள்ளனரே என்ற உணர்வுதான் ஒவ்வொரு குழந்தைகளையும் கற்கத் தூண்டுகின்றது.

இன்று தாம் பெற்ற இன்பத்தை எல்லா மாணவர்களுக்கும் காட்ட வந்திருக்கும் **1992** ஆம் ஆண்டு இரண்டு புலமைப்பரிசில் மாணவர்கள் இ.சசிபரன், கு. சதீஜன் போல் உலகமெல்லாம் பரந்துவாழும் ஏனைய மாணவர்களே! உங்கள் பாடசாலையின்பால் நாட்டங்காணச் செய்யுங்கள். பாடசாலையில் எந்தெந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் மேலும் பாடசாலை வலுவுள்ள கற்றல் நிறுவனமாகும் என்பதை அதிபருடன் சேர்ந்து திட்டமிடுங்கள். அதைப் பெறுவதற்கு அயராது உழையுங்கள். கட்டாயம் அது கிடைக்கும்.

முன்மாதிரியான ஒரு ஆசிரியரையும் முன்மாதிரியான இரண்டு மாணவர்களையும் கொண்டு இன்று நடைபெறும் இவ்விழா உங்கள் யாவரையும் விழிப்படையச் செய்தால் அது இந்த விழாவுக்கும் இந்த மலருக்கும் கிடைத்த வெற்றியாகும்.

திரு. மா. கணபதிப்பிள்ளை.
பணிப்பாளர்.
மும்மொழி அபிவிருத்தித் திட்டப்பிரிவு,
கொழும்பு - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா

நந்தவர் திகழும் கிளிநொச்சி நன்நாட்டில்
நலமிகு திருவையாறு நல்பதியில் - உதித்திடு
சிவபாக்கிய உயர் ஆசிரியை சேவைதனை
உவந்து வாழ்த்த ஓங்கார ஐங்கரன் காப்பு.

பொதியமலையிலிருந்து எழு பொன்தமிழை
புவிக்கெடுத்து இயம்பு குறுமுனியே போல
மதிநுட்ப நுண்ணறிவால் மாணவர்க்கு உரைத்து ஊட்டி
வருடந்தோறும் வரும்புலமைப் பரீட்சை சித்தியெய்தச் செய்யும்
நதிசோலை ஆறு குளம் வயல் நீர்கள் சூழும்
நல்நாடாம் திருவையாறு மகா வித்தியாலய ஓய்வு நிலை
துதி பெறு நல் சிவபாக்கிய ஆசிரியை சொல்லுதமிழ்ப்பணி
தூய அம்பிகை அருள்வாழி!

கற்றவராய் மாணவர்க்கு நல்லறிவையூட்டி
காலையிலே விழித்தெழுந்து கல்வியூட்டி
உற்றவராய் உம்மக்கள் போல் பேணி
உலகறிய புலமைப் பரீட்சை சித்தி எய்தச் செய்யும்
ஈந்தவளே நடராசர் சேர்ந்த பெரு பாக்கியமே
நலமுடனே நாளும் நீங்கள் நன்றாய் வாழி
கற்றவர்கள் எல்லோரும் கைதொழுது போற்றுகின்றோம்
காலமெலாம் சிறந்தோங்கி கனகாம்பிகை அருளால் வாழி!

அற்புதமாய் கல்வியறிவு அள்ளியூட்டும்
ஆசிரியர் சிவபாக்கிய அன்னை வாழி
நற்தாயார் செல்லம்மா சதாசிவம் நமக்குவந்தீந்த
ஞானகலை மாமணியே நடராசா பாக்கியமே வாழி
கற்றவராய் பல மாணவரை காசினிக்கு தந்த பெரு
கலைக்கடலே கலைமாதே கலைத்திருவே வாழி
பற்பல நல்வளமோங்கி பாரினிலே உம்பணி மேன்மையுற்று
பல்லாண்டு நீங்கள் வாழி நீடுழி வாழி! வாழி!

மாணவர்கள்
(2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை 2013

| இல. | மாணவர் பெயர் | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 01. | கேதீஸ்வரன் அபியுகா | 175 | 19 |
| 02. | கனகசபை சரன்சி | 154 | 142 |
| 03. | சிவகுமார் கிசாந் | 156 | 127 |
| 04. | ரூபன் தணேசன் | 153 | 135 |
| 05. | திருக்குமரன் யதுசா | 159 | 99 |
| 06. | மோகனதாஸ் நிர்சிகா | 170 | 42 |
| 07. | சிறிதரன் துசாளிகா | 149 | |
| 08. | ஜெகநாதன் அஜந்தன் | 118 | |
| 09. | துரைராசா அரவிந்தன் | 95 | |
| 10. | கேதீஸ்வரன் டிலோசன் | 100 | |
| 11. | ராஜேந்திரன் கிருஜன் | 97 | |
| 12. | ராஜகுமார் லக்சன் | 77 | |
| 13. | சந்திரமோகன் மாதுளன் | 79 | |
| 14. | தசக்கிரீபன் நிலக்சன் | 92 | |
| 15. | குகதாஸ் பிரதீப் | 72 | |
| 16. | சதானந்தன் பவித்திரன் | 111 | |
| 17. | பரமானந்தராசா சஜித் | 129 | |
| 18. | பார்த்தீபன் சஞ்சீபன் | 139 | |
| 19. | நடராசா செந்தூரன் | 78 | |
| 20. | யோகநாதன் சுஜீபன் | 127 | |
| 21. | சிறிமோகன் வைஷ்ணவன் | 146 | |
| 22. | சந்திரன் தனுசியா | 72 | |
| 23. | சந்திரகுமார் கௌரி | 117 | |
| 24. | சசிக்குமார் இனுஜா | 129 | |
| 25. | அன்ரனிகுமார் கஸ்மீரா | 82 | |
| 26. | மோகனதாஸ் கீர்த்திகா | 147 | |
| 27. | தேவாகரன் கரணி | 116 | |
| 28. | சேவியர் கத்தரின் | 114 | |
| 29. | ஜெயசீலன், மயூரிகா | 123 | |
| 30. | வடிவேல் மதிவதனி | 83 | |
| 31. | பத்மநாதன் நிவேதிகா | 90 | |
| 32. | தங்கராசா புவிதா | 104 | |
| 33. | கனகநாதன் பிரவீனா | 146 | |
| 34. | ராஜசுரேஸ் சஞ்சிதா | 114 | |
| 35. | சுதாகரன் திலக்சிகா | 138 | |
| 36. | திரஷியநாதன் தர்சிகா | 138 | |
| 37. | தர்மசீலன் வனிதா | 116 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010 - 2013 வரையான பகுப்பாய்வு

| வீச்சு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| 0-10 | 1 | - | - | - |
| 11-20 | - | - | - | - |
| 21-30 | 3 | - | - | - |
| 31-40 | 3 | 1 | - | 1 |
| 41-50 | - | 2 | 2 | 5 |
| 51-60 | 6 | 4 | 4 | 4 |
| 61-70 | 1 | 2 | 4 | 1 |
| 71-80 | 4 | 1 | 6 | 5 |
| 81-90 | 4 | 2 | 4 | 3 |
| 91-100 | 5 | 8 | 5 | 4 |
| 101-110 | 4 | 4 | 4 | 1 |
| 111-120 | 3 | 3 | 2 | 7 |
| 121-130 | 2 | 3 | 4 | 4 |
| 131-140 | 2 | 5 | - | 3 |
| 141-150 | 2 | 5 | 3 | 4 |
| 151-160 | - | - | 1 | 4 |
| 161-170 | 2 | - | 1 | 1 |
| 171-181 | 1 | 1 | 2 | 1 |

**பிறரை நம்பி வாழ்பவர்களுக்கு**
**வறுமை எப்போதும் இருந்துகொண்டே இருக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை


2013 ஆம் ஆண்டு 'பூந்தளிர்' இதழை வெளியீடு செய்வதற்கு பலரது ஒத்துழைப்பும் முக்கிய காரணமாகும். இந்தப் பாராட்டு நிகழ்வு காலம் கடந்துவிட்டாலும் நிறைவான மலர் வெளியீட்டினை மேற்கொண்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. மலர் வெளியீடு செய்யப்படவேண்டும் என சிந்தனையை வெளிப்படுத்தி ஊக்கமளித்த எமது பாடசாலையின் அதிபர் அவர்களுக்கு எமது நன்றிகள்.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் படங்களைச் சேகரித்துத் தந்துதவிய முன்னாள் ஆசிரியர் திருமதி நடராசா சிவபாக்கியம் அவர்களும் நன்றிக்குரியவர்.

இந்நூலுக்கான முழுச்செலவினையும் பொறுப்பேற்று நிதியுதவி வழங்கிய எமது பாடசாலையின் பழையமாணவர்களான இ.சசிபரன், கு. சதீஜன் ஆகியோருக்கும்; அதனை ஒழுங்குபடுத்திய பழைய மாணவன் இ. ஜசீலன் அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகும். மற்றும் மலருக்கான வாழ்த்துரைகளைத் தந்துதவிய வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், பிரதி அதிபர், வகுதித் தலைவர், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகட்டும். சிறந்த கருத்துக்களுடன் கட்டுரையினை தந்துதவி இவ்விதழினை அலங்கரித்த மும்மொழித் திட்டப் பணிப்பாளர் மா. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் எமது பாடசாலை ஆசிரியர்களுக்கும் நன்றிகள்.

பூந்தளிர் இதழினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்துதவிய அன்றா பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகளை உளமாரக் கூறி வாழ்த்துகின்றோம்.

- மலர்க்குழு -
பூந்தளிர் - 2013.
கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள்!

அன்புச் சகோதரர்களே!!

பழைய மாணவர்களே!!! – எங்கள்

பள்ளியை உயர்த்திடுவோம்.

பழைய நினைவுகளை மீட்டிடுவோம்.

இது எம் வீடென இதயத்தில் கொண்டு

இனியன செய்வதே

இதமெனக் கொள்வோம்.

ANDRA Printers, Jaffna - 021-221 7279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org